

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 09.04.2026


# பழனிசாமி மறைக்க நினைத்த படுகொலை...

சாத்தான்குளம் காவல் நிலையத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த படுகொலையை மறைக்க நினைத்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. சி.பி.ஐ. எடுத்து நடத்திய வழக்கில் 9 காவலர்களுக்கும் தூக்குத் தண்டனை விதித்து மதுரை முதலாவது கூடுதல் நீதிமன்றம் தீர்ப்பைத் தந்துள்ளது.

**சி.பி.ஐ. தனது விசாரணையின் போது, சாத்தான்குளம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், எஸ்.ஐ.க்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், சிறப்பு எஸ்.ஐ. பால்துரை, போலீஸ்காரர்கள் முருகன், முத்துராஜ், சாமத்துரை, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேரைக் கைது செய்து மதுரை சிறையில் அடைத்தது. இதில் சிறப்பு எஸ்.ஐ.பால்துரை இறந்து போனார். மீதம் உள்ள 9 போலீஸாரும் குற்றவாளிகள், அவர்கள் அனைவருக்கும் தூக்குத் தண்டனை என்று 6 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு அளித்திருக்கிறது மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம்.**

நீதிபதி ஜி.முத்துக்குமரன் அளித்த தீர்ப்பில் உள்ள சொற்கள் பதற்றம் அடைய வைக்கின்றன. “9 போலீஸ்காரர்கள் மீதான குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருமே கொலைக் குற்றவாளிகள். ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரும் காவல் நிலையத்தில் வைத்தே சாகடிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவர் மீதும் பொய்வழக்குப் போட்டு கைது செய்துள்ளார்கள். இரக்கமின்றி அடித்தே கொன்றுள்ளார்கள். இந்த வழக்கில் நீதிமன்றங்கள் தலையிடாவிட்டால் இருவரின் உடலோடு சேர்ந்து உண்மையும் புதைக்கப்பட்டு இருக்கும்.

தந்தை, மகன் ஆகிய இருவரையும் சட்டவிரோதமாக அடைத்து இரவு முழுவதும் தாக்கி இருக்கிறார்கள். பழிவாங்கும் நோக்கில் இந்த சம்பவம் நடந்துள்ளது. தந்தை முன் மகனையும், மகன் முன் தந்தையையும் நிர்வாணப்படுத்தி மனம் போன போக்கில் தாக்கி இருக்கிறார்கள். இனி இது போல் நடக்கக் கூடாது என்பதால் தூக்குத் தண்டனை வழங்குகிறோம்” என்று தீர்ப்பளித்துள்ளார் நீதிபதி.

**இந்த மாபெரும் கொடூரத்துக்கு தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டியவர் அன்றைய முதலமைச்சர் பழனிசாமிதான். ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர் கொலையையே மறைக்கப் பார்த்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி.**

**“22.6.2020 அன்று இரவு 7.35 மணிக்கு சிறையில் இருந்த திரு.பென்னிக்ஸ் தனக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவதாகக் கூறியதையடுத்து சிறைக் காவலர்கள் திரு.பென்னிக்ஸை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். திரு.பென்னிக்ஸ் சிகிச்சை பலனின்றி இரவு 9 மணியளவில் உயிரிழந்துள்ளார்.**

**இந்நிலையில் 23.6.2020 அன்று அதிகாலை சிறையில் இருந்த திரு. பென்னிக்ஸின் தந்தை திரு.ஜெயராஜ் தனக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்ததையடுத்து, சிறைக் காவலர்கள் அவரை கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர். சிகிச்சையில் இருந்த திரு.ஜெயராஜ் அன்று காலை 5.40 மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்” என்பதுதான் அன்றைய தினம் உள்துறையைக் கையில் வைத்திருந்த பழனிசாமி சொன்னது ஆகும்.**

இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பிய பிறகும் மழுப்பினார் பழனிசாமி. ‘சி.பி.ஐ. விசாரணை கேட்டு நீதிமன்றத்தை தி.மு.க. நாடும்’ என்று தி.மு.க. தலைவர் அவர்கள் சொன்ன பிறகுதான், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டார் பழனிசாமி.

**‘காவலர்கள் மீது கொலை வழக்காகப் பதிவு செய்வதற்கான முகாந்திரம் உள்ளது’ என்று சொன்னது சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளை. உயர்நீதி மன்ற நீதியரசர்களால் வரலாற்றின் முதல் முறையாக சாத்தான்குளம் காவல் நிலையம், காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டு வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டது.**

**உயர்நீதிமன்ற நீதியரசர்களால் கோவில்பட்டி மாஜிஸ்திரேட் பாரதிதாசன் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டார். அவரை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் காவலர்கள் மிரட்டினார்கள். ‘உன்னால் ஒன்றும் ...... முடியாது’ என்று காவலர் ஒருவர் தன்னை மிரட்டியதாக மாஜிஸ்திரேட் நீதிமன்ற பதிவாளரிடம் புகார் செய்தார்.**

**இரண்டு நாள் வைத்திருந்து சாகும் அளவுக்கு தாக்கப்பட்ட நிலையில் கொண்டு வரப்பட்ட இரண்டு பேரை சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, சாத்தான்குளம் நீதிமன்றம், கோவில்பட்டி கிளை சிறை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை - ஆகிய அரசு எந்திரம் அனைத்தும் மறைக்கப் பார்த்தார்கள். உடல்நலம் பாதிக்கப்பட்டு தான் அவர்கள் இருவரும் இறந்தார்கள் என்று ஜடத்தைப் போல முடிவெடுத்து அறிவித்தது பழனிசாமியின் நிர்வாகம்.**

“... கடையை மூடச் சொன்ன எங்களை மிரட்டிய ஜெயராஜும், பென்னிக்ஸும் தரையில் புரண்டார்கள். அதில் அவர்களுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது..” என்று முதல் தகவல் அறிக்கை எழுதியது பழனிசாமியின் போலீஸ்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தமிழக அரசின் வழக்கறிஞர் இதனைப் பூசிமெழுகப் பார்த்தார். ‘இது லாக்அப் மரணமே அல்ல’ என்று அன்றைய அமைச்சர் கடம்பூர் ராஜூ சொன்னார். அவர்தான் இன்று கோவில்பட்டி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடுகிறார்.

**கண்ணால் பார்த்ததை வாக்குமூலமாகக் கொடுத்த தலைமைக் காவலர் ரேவதி மிரட்டப்பட்டார். சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இருந்த சி.சி. டி.வி. காட்சிகள் அழிக்கப்பட்டன. ஆதாரங்கள் மறைக்கப்பட்டன. இவ்வளவும் அ.தி.மு.க. ஆட்சி மேலிடத்தின் உதவி இல்லாமல், சாதாரண காவலர்களால் செய்திருக்க முடியாது. ஊடகங்களில் ஏராளமான வீடியோ ஆதாரங்கள் வெளியானபிறகு சி.பி.ஐ.விசாரணைக்கு ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு பழனிசாமி நெருக்கடிக்கு உள்ளானார்.**

**சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் தனது கடமையைத் தவறியுள்ளார் என்றும், முறையாக அவர் பரிசோதனை செய்யவில்லை என்றும் சி.பி.ஐ. விசாரணை சொல்கிறது. சாத்தான்குளம் அரசு மருத்துவமனை தொடக்கப் பதிவேடுகள், அடுத்தடுத்த மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள், கோவில்பட்டி சிறையில் அடைத்தபோது எழுதப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றுக்குள் முரண்பாடுகள் இருப்பதாகவும் சி.பி.ஐ. சொன்னது. இதுதான் பழனிசாமி ஆட்சியின் லட்சணம் ஆகும்.**

இப்படி **அ.தி.மு.க. ஆட்சியில் மூடி மறைக்கப் பார்த்த வழக்குதான் சாத்தான்குளம் வழக்கு. அதனால்தான் சி.பி.ஐ. கேட்க வேண்டிய அவசியம் அன்று ஏற்பட்டது. தி.மு.க. தலைவர் பிரச்சினையை கையில் எடுத்து சி.பி.ஐ. விசாரணை தான் வேண்டும் என்று நெருக்கடி கொடுக்காமல் போயிருந்தால், இப்படுகொலை மறைக்கப்பட்டிருக்கும். மறக்கப்பட்டு இருக்கும்.**

**குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் தண்டனை தந்துவிட்டது. மக்கள் மன்றம் பழனிசாமியைத் தண்டிக்கத் தயாராகி வருகிறது.**

## திருவண்ணாமலையில் அனைத்துத் தரப்பினரும் ஆதரவு –

# இவர்களை மீறி நம்மை வெல்பவர் யார்?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**திருவண்ணாமலை, ஏப்.9-**

**திருவண்ணாமலையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைபயிற்சியின்போது நேற்று காலை திருவண்ணாமலைத் தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் எ.வ.வேலு அவர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.**

**இச்சம்பவம் குறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பக்கத்தில் புகைப் படத்துடன் திருவண்ணாமலையில் அனைத்துத் தரப்பினரின் ஆதரவு கிடைத்திருக்கிறது இவர்களை மீறி நம்மை வெல்பவர் யார்? என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

**இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

**திருவண்ணாமலையின் விடியலில் பெற்றவை: குழந்தையின் முத்தம், குவளை தேநீர், தொழிலாளத் தோழர்களின் வாஞ்சை, ஆன்மீக அன்பர்களின் பாராட்டு, மாணவர்களின் உற்சாகம், பெண்களின் பேராதரவு! இவர்களை மீறி நம்மை வெல்பவர் யார்?**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**








**சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள புகைப்படங்கள்!**

# சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்பது கழக அரசு!

## குட்டத்துப்பட்டி தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*சின்னாளபட்டி, ஏப்.09-*

*சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பாக இருப்பது தி.மு.க. அரசு என்று குட்டத்துப்பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, பா.ஜ.க. அரசு 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்க நினைத்தாலும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விடமாட்டார் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதிபட பேசினார்.*



*திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியின் தி.மு.க. வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி கிராமம் கிராமமாகச் சென்று தொடர்ந்து தனக்கு வாக்களித்து வரும் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தும் வருகிறார்.*

*குட்டத்துபட்டி ஊராட்சிக்குட்பட்ட காலாடிபட்டி, மைலாப்பூர், குட்டத்து ஆவாரம்பட்டி, குட்டத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் தீவிரமாக பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.*

*அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5 வருடங்களாக சிறுபான்மையின மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்றால், அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு தான் என்றார். வைகை அணையிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு ரெட்டியார்சத்திரம் பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் தயாராக உள்ளது.*

*தேர்தல் முடிந்த பின்பு அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும். ரெட்டியார்சத்திரம் வடபகுதியில் உள்ள குளங்களுக்கு மழை நீர் வீணாகாமல் சிமெண்ட் வாய்க் கால் கட்டிக்கொடுத்ததுபோல் தென் பகுதியில் உள்ள குட்டத்துப் பட்டி, அனுமந்தராயன் கோட்டு, கோனூர், மாங்கரை ஆகிய ஊராட்சி பகுதியில் உள்ள குளங்களுக் கும் சிமெண்ட் வாய்க்கால்கள் அமைத்துக் கொடுக்கப்படும். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கான விவசாயிகள் மகிழ்ச்சியில் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.*

*அதன் பின்னர் அருகிலுள்ள கிராமங்களுக்கு சென்று உதயசூரியன்; சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.*

அமைச்சர் ஐ.பெரியசாமி